# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889)
ஆவணி மாதம் 28-ந் உ ஆரம்பமானது.

செவ்வாய் வெள்ளி தோறும் வெளி வருவது

Registered as a News Paper in Cey
P M G No. H A 59/300 of 1939

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத் - ௬௪] யாழ்ப்பாணம்:- நந்தன வருஷம் ஆடிமீ உக௨ செவ்வாய்க்கிழமை (5 AUGUST 1952) [இல - ௩௨]


அரசியல் அலை

## உணவு உற்பத்தியில் ஊக்கம்!

### உடம்பில் ஊசியைச்செலுத்தவேண்டுமா?

அவ்வப்பொழுதைக்கு வேலை செய்து பணந்தேடி உணவு கொள்பவன்போன்று இலங்கையின் அரிசி நிலைமையும் இருக்கின்றது. வானத்தைப் பார்க்கிறான் கமக்காரன் என்றால் இலங்கை வாசி இதர தேசத்தையும் அங்கிருந்து வரும் உணவுக் கப்பலையும் நோக்கியவண்ணமா யிருக்கின்றானே!

உலக மகாயுத்த காலத்தில் ஒவ்வொரு அங்குல நிலமும் உணவுப் பொருள் உற்பத்தியில் ஈடுபட்டிருந்தமையாற் கடும் பஞ்சம் வாராது தடுக்கப்பட்டது.

போர் முடிந்ததும் வாழ்க்கைப் போரும் நின்றுவிட வேண்டுமா? கமத்தொழிலிற் கவனஞ் செலுத்தியவர்கள் எல்லோரும் காசு தேடுந்தொழிலில் ஈடுபடலாயினர். தொழிற்சாலைகளிற் சென்று வேதன நிச்சய மென்கின்ற மனத் திண்ணத்தைப்பெற்றுவிட ஒவ்வொருவரும் அவாவினால் உணவுப்பொருள் உண்டு பண்ணுவது யாரைப் பொறுத்தது? பணப் பை பாரமாக இருந்தாலும் உண்ண உணவில்லாவிட்டால் உடம்பின் கதியென்ன? உள்ளதிற் சமாதானம் எங்கே?

புகையிலை வெங்காயம் இப்படியான பொருட்களை உற்பத்தி செய்து பணப் புதையல் எடுப்பதிற் கண்ணும் கருத்துமாக இருக்கின்றார்களேயன்றி ஒவ்வொரு வயது வந்தவனும் உணவுப் பொருள் சிறிதளவேனும் உண்டுபண்ண எண்ணுகிறானா? உட்கார்ந்திருந்து கொண்டு அரிசியில்லை என்கின்றதாம் என்ற அரசியல் ஞானம் பேசுவதாற் பயனென்?

## தொன்மைக்குந் தொன்மையாகும் ‘நன்மொழி’

### தமிழ் ஆக்கம் கருதிப் புலவர்களுக்குத் தகுதி வழங்குக

### பாராளுமன்றத்தவர்களே! இது உங்கள் பணி.

தமிழின் தொன்மை இத்துணையதென யாருமறிந்திலர், ‘எலியட்ஸ்மித்’ முதலிய சில நூல் வல்லுநர் சிலர் இவ்வுலகில் சிலப்பரப்புத் தோன்றிய காலமும் தமிழனின் தோற்றமும் ஒன்றுதலேசாலுமென்பர். ஆனால் தொல்காப்பியத்தை ஆதாரமாகக்கொண்டே தமிழின் தொன்மையை மதிப்பிட முடிகின்றது. தொல்காப்பியம் இடைச் சங்கத்திலேற்பட்டதெனவும் முதற் சங்கத்திலாக்கப்பட்ட அகத்தியமே பேரிலக்கணமாகும் எனவுங் கூறுவர். அவ்விதமாயின் அகத்தியத்திற்கு முன்பே பல பேரிலக்கியங்கள் இருந்திருக்கவேண்டும். அப் பேரிலக்கியங்கள் தோன்றுவதற்கு முன் தமிழ் திருந்திய நடையெய்தப் பல காலமாகி யிருக்கலாம். எனவே தமிழ்மொழி, தொன்மையில் எம்மொழிக்கும் முற்பட்டதேயெனல் மிகையாகாது.

#### தவப் பயன்

பண்டைய தமிழ் வேந்தர்கள் புலவரவைகளை யமைத்துத் தமிழ்மொழியை வளர்த்தனர். அவ்வறிஞர் துணை கொண்டு அரயசிலை அமைதிபெற நடாத்தினர். அவ்விதம் அமைக்கப்பட்ட முதற் சங்கமும் இடைச் சங்கமும் கடல் கோளாலழிந்தன. இடைச் சங்க காலத்திலேற்பட்ட தமிழனின் பெருநிதியமாம் தொல்காப்பியம் மாத்திரம் தமிழன் செய்த பெருந் தவத்தால் கொடுங்கூற்றமாம் கடல் கோளிலிருந்தும் தப்பித் தமிழன் கையில் சிக்குண்டது. அப் பெருநிதியத்தை வைத்தே இன்றுமுள்ள கூடலில் கடைச்சங்க மமைக்கப்படலாயிற்று. அக்கடைச்சங்க காலத்திலேற்பட்ட இலக்கியங்களே இன்று சங்க இலக்கியங்களென்ற பெயருடன் மிளிர்கின்றன.

#### தமிழ் வளர்த்த சமயகுரவர்கள்

மதுரையில் விளங்கிய கடைச்சங்கம் கி.பி. 2-ம் நூற்றாண்டிலோ அன்றி அதற்கு முன்போ அழிந்தொழிந்ததெனக் கூறுவர். பண்டைத் தொல்காப்பியமும் கடைச்சங்க இலக்கியங்களும் உயிர்பிழைத்தன. கி.பி. 2-ம் நூற்றாண்டுடன் சேர சோழ பாண்டியராது ஆட்சி குன்றியது. களப்பிரரின் ஆதிக்கமேற்படலாயிற்று. 6-ம் நூற்றாண்டுவரை தமிழ்நாடு குழப்பமான நிலையிலேயே சிக்குண்டது. 7-ம் நூற்றாண்டின் ஆரம்பத்திலே பல்லவராட்சி ஏற்படலாயிற்று. காஞ்சிபுரத்தை இராசதானியாகக் கொண்டு பல்லவர்கள் தமிழ் நாட்டைத் தம்மடிப்படுத்தினர். அக்காலத்தில் தமிழரசரும் ஆட்சி செய்தனரெனினும் தம்மெழுச்சி குன்றிய நிலையிலேயே விளங்கினர். களப்பிரராட்சியில் தமிழ் மொழி அழிந்துவிடவில்லையாயினும் தமிழின் வளர்ச்சி குன்றியது பல்லவரின் ஆட்சிக்காலத்திலேயே தமிழடி

தொடர்ச்சி 3-ம் பக்கம்

உ

### மெய்த்தேவர் தேவர்க்கே சென்றூதாய் கோத்தும்பீ!

திருச்சிற்றம்பலம்

அத்தேவர் தேவ ரவர்தேவ ரென்றிங்ஙன்
பொய்த்தேவு பேசிப் புலம்புகின்ற பூதலத்தே
பத்தேது மில்லாதென் பற்றறநான் பற்றிநின்ற
மெய்த்தேவர் தேவர்க்கே சென்றூதாய் கோத்தும்பீ.

திருச்சிற்றம்பலம்.

## கருணை உருவான - - கதிரைமலைக் கந்தன்

### உள்ளம் உருக்கும் பத்தர் பசனை

தென்னிலங்கா தீபம் தெய்வ மணங் கமழும் நாடென்றால் அன்றென்பாருண்டுகொல். யானைபுலிகாடியாவும் நிறைந்து அடர்ந்தஅடவியின் நடுவே தெய்வமலைச்சாரலிலே உய்ய வழி தேடுவார் உவந்து நீராடும் மாணிக்க கங்கைக் கரையோரம் கந்தன்கோயில் ஒன்று உண்டு என்றாற் கமழும் மணம் தெய்வ மணமலாது வேறியாது.

கார்த்திகேயன் கருணை பொலிந்த ஊருக்குக் கார்த்திகேய கிராமம் எனவோர் காரணப் பெயர் தோன்றிக் காலகதியிற் கதிர்காமமெனத் திரிதல வேறுபாடடைந்ததென்பர் சரித்திரகாரர். இத் தெய்வ இடத்திலே இளம முருகன் எழில்கொண்டு அருள்புரிகின்றான்.

குன்றுதோறாடல் விரும்பிய குமரன் கோலங்கொண்டமர்ந்திருக்கும் கதிர்காமத் திருஇடத்திலே அவன் அருள் வெள்ளம் பருகியுண்டு பெரும் பயனடையப் பத்த கோடிகள் ஆடித்திங்களில் அழகாய்நடைபெறும் திருவிழாக் கண்டு பேரானந்தமடையச் சென்றவண்ணமாகவே யிருக்கின்றார்கள்.

இயற்கை எழில் ஒருபால், அடர்ந்து படர்ந்த காடு ஒருபால்; இன்பமாய் ஓடும் மாணிக்கயாறு ஒருபால் இடி, முழக்கம்போன்று ஒலிக்கும ‘அரோ அரா’ ஓதல் ஒருபால், என்ன அமைப்பு. என்ன அமைதி, என்ன உணர்ச்சி, என்ன உள்ளத்துருக்கம்.

பாலாபிடேகம் பழனியின் பண்பு என்றால், கற்பூர நற்றீபம் கதிர்காமக் கலாசாரம்.

ஏழுமலை ஏறிவரும் அடியார்கள் உள்ளத்தும் உடம்பிலும் ஒருங்கமைந்தது கதிரைமலை.

எல்லையில்லை இப் புண்ணிய பூமிக்கென்று சொல்லுவார் போன்று செல்லக் கதிர்காமம் திகழ்கின்றது.

இயற்கைவாகனத்தில் இவர்பவர்கள் பல்லாயிரம்; இயந்திரங்களில் ஏறிச் செல்பவர்கள் பல்லாயிரம் மாணிக்க கங்கை மருங்கில் மனித வெள்ளம்.

கந்தா, கதிர்காமத்துரையா, முருகா, வள்ளிமணாளா, குன்றெறிந்தவா, கோலமயில்வாகனா சேவற்கொடியா, சித்தி வேலாயுதா என்று ஓர்குரலில் ஒரே மூச்சில், ஒரே நினைவில முருகநாம முழக்கம்.

கண்கொள்ளாக் காட்சி! கதிரைமலைக் கந்தன் தீர்த்தத் திருவிழா நாளைத் தினம் நிகழும்.

### பசுவுக்காக உண்ணு விரதம்

பீகாரிலுள்ள பண்டித இராமசந்திரசர்மாவீர் என்னும் சன்னியாசி பசுக்கொலையை நிறுத்துவிப்பதற்காக 65 நாள் உண்ணு விரதத்தை மேற்கொண்டிருக்கிறார். உள்ள நெகிழ்ச்சியுடையார் இதை உற்றுப் பார்ப்பார்களா?

## மாணிக்க நதியோரம் வளரும் வடிவேலன் ஆலயம்

### இயற்கை எழிலிடை இறைவன் இன்னருள்



### திருத்தொண்டர் திருநாள்
### திருத்தொண்டிற் சிந்தைபதிந்த கோட்புலிநாயனார்

சோழ நாட்டிலே நாட்டியத்தான் குடியிலே வேளாண் மரபிலே திருவவதாரஞ் செய்து சேனாதிபதியாகப் போர்புரியுந் தொழிலை யுடையராகித் தாம் பெறும் வேதனத்தைச் சிவாலயங்களில் திருவமுதுக்கு நெல் வாங்கிக் கொடுப்பதற்குச் செலவழித்தார் கோட்புலிநாயனார்.

அக்காலத்திலே போருக்குச் செல்ல நேர்ந்தபொழுது தாம திரும்புமளவும் வேண்டிய நெல்லை வாங்கிக்கட்டி அதை எடுக்கக்கூடாதென்று தம் சுற்றத்தவர்களுக்குத் தனித்தனி ஆணையிட்டுச் சென்றார். பஞ்சமுண்டாயிற்று. அவர்கள் ஆணையின்படி நில்லாது நெல்லையெடுத்தார்கள்.

போர் முடிந்ததும் அரசன் கொடுத்த நிதியுடனே திரும்பி வந்து சுற்றத்தவர்களை அழைத்து அவர்கள் செய்தது அபராதமெனறு யாவரையும் வெட்டினார். அப்பொழுது சிவபெருமான் தோன்றியருளி அவர்கள் யாவருக்கும் சுவர்க்கமீந்தருளி நாயனாரைத் தம்முடன் செல்லுமாறருளினார்.

அந்நிலையே சிவபெருமான்
அன்பரெதிர் வெளிநின்று
உன்னுடைய கைவாளால்
உறுபாசம் அறுத்தகிளை
பொன்னுலகின் மேலுலகம்
புக்கணையப் புகழோய்நீ
இந்நிலைநம் முடனணைகென்
றேவி எழுந்தருளினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே

# இந்துசாதனம்

யாழ். நந்தன ௵ ஆடி ௴ ௨௰௨ செவ்வாய்க்கிழமை

## அரசாங்கம் சூதாட்டத்திற்கு ஆதரவளிக்கலாமா?

"காதல் கவறுடல் கள்ளுண்டல் பொய் மொழிதல் ஈதல் மறுத்தல் இவை கண்டாய் — போதில். சினையாமை வைகுந் திருநாடா செம்மை நினையாமை பூண்டார் நெறி" என்றார் புலவர். ஒரு நாட்டின் பரிபாலனப் பொறுப்பை ஏற்றவன் முடிசூடிய மன்னனானாலென் குடியானவர் தெரிந்தெடுத்த அமைச்சனானலென், தனிப்பட்ட முறையில் மனிதன் எவ்வாறு ஒழுக்க நெறியில் நிற்க வேண்டுமோ, அவ்வாறு பொது சனங்கள் யாவரும் நல்வழி வாழ்ந்துவர உதவி புரியும் அரசியலை அமைக்க வேண்டுமென்பது பொது அறிவின் பாற்பட்டது. ஆகவே, அறநெறி நின்று அரசியல் நடத்தும் அமைச்சன், ஐம்பெரும் ஆகாச் செயல்களை அகற்றக்கூடிய நிர்வாகத்தை உண்டு பண்ணவேண்டுமே யன்றி ஒழுக்க இயலில் இழுக்கென விலக்கப்படும் செய்கைகளுக்கு நேர்முகமாகவோ மறைந்து நின்றோ உதவியும் ஊக்கமும் அளித்தல் குற்றமென்பதற்காதாரங் காட்டவும் வேண்டுங்கொல்!

தொன்றுதொட்டு நன்னெறிக்கும் இறைவழிபாட்டுக்கும் எடுத்துக்காட்டாக இலங்கிவந்த பரதகண்டமும் ஈழநாடும் குடிவகைகள் மூலமாக அரசாங்க வருவாய் தேடுவதென்றால் எத்துணை அவமானம்? சட்டமூலமாக மது அருந்துவோரின் மனத்தை மாற்றமுடியாதென்றால், ஒரு நல்ல அரசாங்கம் போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபட வேண்டுமா? அவ்விதத் துறையிற் பொன் தேடல் முறையா?

இலங்கை அரசாங்கம் சாராயம் வடிக்கும் தொழிலில் ஈடுபட்டிருப்பதுமன்றிப் போதிய வருவாய் இம்மார்க்கத்தால் ஏற்படவில்லை என்றும் மது விற்பனை பொதுவாகச் செழிக்கவில்லை என்றுங் கண்ணீர் வடிப்பதென்றால், இந்த அரசாங்கம், பொதுவுடைமையினர் கோயில்களைக் கொள்ளையடிக்கப் போகின்றார்கள், ஆலய வழிபாட்டைக் கேலி செய்கின்றார்கள், இறைவனில்லையென்று இறுமாப்புக்கொள்கின்றார்கள் என்று ஏதோ நல்லொழுக்கத் தாதாக்கள் போன்று 'அண்ணே வா தம்பீ வா' என்று ஞானப் போர்க்குறை கூறுவது போலிவேடப் பொலிவல்லவா?

இவ்வளவில் நின்றுவிட்டாற் போதாதா? இன்னம் ஒரு 'செம்மை நினையாமை பூண்டார் நெறி' இப்பொழுது ஒருவர் எண்ணத்தில் எழுந்திருக்கின்றது. சூதாட்டத்தால் முடியுடை வேந்தர் முன்னாட் கெடுநிலையடைந்து நாடு நகரிழந்து நலிந்து வந்ததெங்கள் நாட்டிற் சிறுவர்களும் சரித்திர வாயிலாக அறிவர். இந்தச் சூதாட்டத்தின் சீர்திருந்திய முறையாம் குதிரைப் பந்தயம். இந்த ஆட்டத்தை அடிப்படையாகக்கொண்டு ஒவ்வொரு வீதியிலும் விடுதியிலும் நகரத்திலும் நாட்டுப் புறத்திலும் பந்தயம் பிடிக்கிறவர்கள் பல்லாயிரக்கணக்கானோர் மறைமுகமாகத் தொழில் ஆற்றுகின்றார்களாம். இவர்களுக்கெல்லாம் முறைப்படி உத்தரவு கொடுத்து அதனால் அரசாங்கத்திற்கு வருவாயைத் தேடலாமென்றும், குதிரைப் பந்தயத்தையே நேரிய முறையிற் கொணர்ந்துவிடலாமென்றும், அரசியற் பொறுப் பேற்றிருக்கும் அநுபவம் வாய்ந்த இருஅமைச்சர்கள் ஆலோசனை கூறியிருக்கின்றார்களாம். என்ன விந்தை! என்ன வேடிக்கை! அரசியலும் சூதாட்டம் போன்றதாய்விட்டதா?

உண்ண உணவில்லை, உடுக்க உடையில்லை, நோய் மாற்ற வைத்தியசாலையில்லை என்றெல்லாம் பொதுசனம் புலம்பிக்கொண்டிருக்கும்பொழுது அவர்களுக்கு ஆசைகாட்டி மோசஞ்செய்ய அரசாங்க அதிகாரம் பெற்ற பந்தயப் பண்ணைகளை நிறுவ இலங்கை அரசாங்கம் நினைக்குமேயானால் பொதுவுடைமைக்கட்சியினரின் அரசியலுக்கும் பொதுசனநாயகப் பொறுப்பாளருக்கும் வித்தியாசம் என்னையோ? சைவ மத சங்கங்களும், கலா நிலையங்களும பல்கலைக் கழகமும் ஏனைய மதச் சங்கங்களும் அரசாங்கத்தாருக்கு நன்மொழி சொல்லி நாட்டின் நலத்திற்காகவும், பூர்வ புகழுக்காகவும், மனித வாழ்வின் புனிதப் பொலிவுக்காகவும் மது சூது முதலிய தீமை பயக்கும் ஏதுக்களுக்கு அரசாங்கம் ஆதரவளிக்க ஒண்ணாதென வற்புறுத்துதல் மிகமிக அவசியமாகின்றது.

## 8-ம் வகுப்பு பரீட்சையும் உயர்தரக் கல்வியும்

அரசாங்க 8ம் வகுப்புப் பரீட்சையிற் சித்திபெய்தாத மாணவரும் உயர்தரக் கல்வி கற்கலாம் ஆனல் அதற்கு அவர்[illegible] கொடுக்கவேண்டுமென[illegible]கின்றது.

## வேலை வணங்குவது எமக்கு வேலை

### முருகன் கைவேல் உண்டே நமக்கு ஒரு மெய்த்துணையே!

ஓகையாற் றிரைமுன் ஞளில் உழக்குமா வினையும் வாட்டும்
ஏகவெவ் வரையின் எல்லை பிடித்திடும் இமையோர் போற்றத்
தோகைமேல் உலவும் கந்தன் சுடர்க்கரத் திருக்கும் வெற்றி
வாகையே சுமக்கும் வேலை வணங்குவ தெமக்கு வேலை.

உலகம் உய்யவந்த ஒரு திருமுருகன் கையில் உள்ளது வேல் என்றால் அவ்வேல் இவ்வளவு தன்மையது என்று உரைக்கவும் கூடுங்கொல். பகை இருள் ஒதுக்கப் பரனருள் படைக்கலம் இது. எனவே ஒருதனிப்பெருந் தத்துவம் வாய்ந்ததாகின்றது. அஞ்ஞான இருள் அகற்ற அமைந்த ஆயுதமாகையால் அஞ்ஞானிகள் கையாளும் ஆயுதங்கள் போலல்லாதது. என்னே? ஞானவேல் எனப்படுவதனால்?

அழிந்துப் பிறக்கவொட்டா அயில்வேலன், இகல்வேலன் குசை நெகிழா வெற்றிவேலோன், படைபட்ட வேலவன், குன்றந் திறக்கத் தொளைக்க வைவேல்விடுங் கோன், வேதாகம சித்ர வேலாயுதன், கதிர்வடி வேலோன், வைவேல் மன்னன், வேற்படை வானவன், செந்தில் வேலன், வேலே விளங்கு கையான், வெற்றிவேற் பெருமான, செவ்வேலவன், என்று கந்தனை வந்தனை செய்யும்பொழுதெல்லாம் வெற்றிவேலாயுதத்தை வணங்குகின்றோமல்லவா!

அன்பருள்ளத் தமர்ந்திருக்கும் இந்த அழகிய வேல், ஞான வேலாய்த், தனி வேலாய், நாயக வேலாய், விமலன் தந்த வேலாய், செவ்வேலாய் இலங்கும் வேலாய் கலக்கத்தை ஒழிக்கும் வேலாய், கவலையைப் போக்கும் வேலாய், இன்பத்தை ஊட்டும் வேலாய், பசிப்பிணி ஓட்டும் வேலாய், வழித்துணையாகும் வேலாய், நமனுக்கஞ்சா நயந்தரும் வேலாய், அச்சம் அகற்றும வேலாய் விளங்குகின்ற தன் பெருமை உணராதார் உண்டோ?

சூலம் பிடித்தெம பாசம் சுழற்றித் தொடர்ந்துவரும்
காலன் தனக்கொரு காலுமஞ் சேன்கடல் மீதெழுந்த
ஆலங் குடித்த பெருமான் குமாரன் அறுமுகவன்
வேலுந் திருக்கையு முண்டே நமக்கொரு மெய்த்துணையே.

பிறப்புண்டேல் கினை மறவாமை வேண்டும் என்று பரிந்து வேண்டும் அடியார்கள் மறவார் கதிர்வேலை.

வினையோ டவிடுங் கதிர்வேன் மறவேன்
மனையோ டுதியங் கிமயங் கிடவோ
சுனையோ டருவித் துறையோ டுபசுந்
தினையோ டிதணோ டுதிரிந் தவனே.

## வாழ்க்கை வானில்

வளர்மதி

### உயிருக்காக உயிர்நீத்தல்

பசுக்கொலை மா பாதகம். இதனைப் பார்த்து மனஞ் சகியேன். இரக்கமற்ற அரக்கர் போன்ற மானிடப் பதர்களுக்குச் சொல்லி ஒன்று ஆவதாகக் காணவில்லை. அந்தோ பரிதாபம என்று மனங்கசிந்த மகா உத்தமர் ஒருவர் இந்திய நாட்டிலே தனது உயிரையாவது தியாகஞ்செய்து மக்கள உள்ளத்தில் அன்பெனும் உணர்ச்சியை உண்டுபண்ணிவிடலாமென்று உண்ணாவிரதம் இருந்தார். பலநாட்கள் கழிந்தன. உடம்பு பலங்குறைந்தது உயிர் நீக்குந தருணம். அன்பர்கள் வைத்தியர்கள் நிலைமையைக் கவனித்து அப்பெரியாரை ஏதும் ஆகாரம் உட்கொள்ளும்படி வேண்டினர். உண்மை உணர்ச்சியால் உந்தப்பட்ட உத்தமர் உயிர் போக வரினும் உண்ணேன் என்று உறுதி கொண்டார் உயிரையும் இழந்தார்! இது கதையல்ல. இதயத்தை அதிரச்செய்யும் இந்நாட் சம்பவம்,

x x x

[illegible] வருமா [illegible] இறைச்சி உண்ணும் அறிவிலிகளுக்கு? வரமாட்டாது, காரணம்: விலங்குகள் பறவைகள் முதலியன காட்டேறும இந்தத் தறுகணாளருக்காக உயிர் நீத்த வண்ணம் இருக்கின்றனவே. இது இயல்பான முறை என்ற எண்ணம் இவர்களபால் எழுகின்றமையே.

x x x

தாம் வளர்த்து நச்சுமாமரம ஆயினுங் கொலார் என்றார் மணிவாசகனார். பிள்ளைபோற் பேணி ஊணஉதவி வளர்த்த ஆடுகளையும் மாடுகளையும் பட்சிகளையும கொன்று உட்கொள்ளும் உள்ளம் எங்கிருந்துதான் இவர்களுக்கு வருகின்றது எண்ணவே ஏக்கமாயிருக்கிறதே! உயிரின் விலை இவ்வளவுதானா? இவர்களா மனித நீதிக்காக, மனித சமத்துவத்துக்காக, மனிதமுன்னேற்றத்திற்காக உழைப்பவர்கள், கூக்குரல் செய்பவர்கள்?

x x x

எத்தனை எத்தனை உயிர்களை உடம்பினின்றும் நீக்கினார்கள் என்று ஒருகால் நினைக்கக் கூடியதாக ஆராவது புத்தி புகட்டினாலும்போதும. இப்படியான கோரக் கொலைஞர்களை மனிதர்கள் என்று நடமாடுகின்றார்களே!

## தேசியக்கொடி!

ஒரு தேசத்தின் கொடி எதைஎதை அறியத் தருகின்றதென்று உற்று நோக்கும்பொழுது அது அத்தேச மக்களுடைய மதிவளம் மதிவளத்திற்கேற்ற வாழ்க்கைப் பண்பாடு ஆகியவற்றை இனிது அறியத் தருகின்றது என்பதைக் காண்கின்றோம்.

இது இவ்வாறாக, எங்கள் அயல்நாடாகிய இந்தியாவின் கொடியை இப்பொழுது தற்செயலாய்க் கண்ணுற நேர்ந்ததும் அது அறியத் தரும் பொருட் சிறப்பு களிபேருவகையை ஒருபுறம் விளைப்ப, மற்றொருபுறம துன்பத்தை விளைக்கின்றது. அது மஞ்சட் சிவப்பு, வெள்ளை, பச்சை ஆகிய மூவர்ணங்கள் சமமாக அமைந்து நடுவே தர்ம சக்கரத்தைத் தாங்கியுள்ளது. மஞ்சட் சிவப்பு துறவுக்கும், வெள்ளை சத்தியஞான நெறிக்கும், பச்சை எமக்குள்ள உலகத் தொடர்புக்கும், சக்கரம் எல்லாவற்றையும் இயக்கும் சக்திக்கும் அறிகுறியாயமைகின்றன. இவை இந்திய மக்கள் யாவருக்கும் பொதுவாயமைந்துள்ளதை இக்கொடி காண்பிக்கின்றது. என்னே மதிவளச் சிறப்பு! என்னே வாழ்க்கைப் பண்பாடு! இத்தகைய பெருமை வாய்ந்த இக்கொடியைக் கண்டு களிகூராத அறிஞரும் இவ்வுலகின்கண் உளர்கொல்?

இஃது இப்படியிருக்க, எங்கள் நாடாகிய இலங்கையின் தேசியக் கொடியை உற்று நோக்குவோம். அது கரைகள் நான்கும் மஞ்சள் நிறத்தவாய் மூன்று பிரிவுகளையுடையது. ஒரு பெரும்பிரிவு நான்கு பக்கமும மஞ்சள் நிறக் கோடுடையதாய்ப் பிரிக்கப்பட்டு நடுவே சிங்கத்தைக் கொண்டுள்ளது. ஏனைய இரண்டு சிறு பிரிவுகளும் மஞ்சட் சிவப்பு பச்சை நிறத்தன. இவற்றுட் சிங்கத்தையுடைய பெரியது சிங்கள மக்களையும் ஏனையவை தமிழ்மக்களையும முஸ்லிமகளையும் குறிக்கும். இது உலகாயதக்காட்சி ஒன்றைமாத்திரம் தருவதாய், மதிவளச் சிறப்புக்குறி வாழ்க்கைப் பண்பாட்டுச் சிறப்புக் குறி என்பன சிறிதுமிலதாயிருக்கின்றது. உலகின்கண் மிகச் சிறந்த மதிவளச் சிறப்பு வாழ்க்கைப் பண்பாடுடைய மக்களாய்ப் பிறந்தும் இத்தகைய இழிந்தநிலையை எய்திவிட்டோமே யென்பது உள்ளுந்தோறும் ஆற்றொணாத் துன்பத்தை விளைக்கின்றதே. மனமபோல வாழ்வு, சார்ந்ததன்வண்ணமாயிருப்பது ஆன்மாவின் தன்மை, என்ற ஆப்த வாக்கியங்களின்படி பார்த்தால், எம பிற்சந்ததியார்யாவருக்கும் உலகாயதமே சமயமாயமையுமல்லவா?

இந்த நிலைமையை இவ்வாறிருக்கவிட்டு வாளாவிருப்போமா அல்லது இதைத் திருத்தியமைக்க முயலுவோமா?

### அரிசி நிலை மோசமானதல்ல

அமெரிக்கா இத்தாலி பிரேசில் முதலிய நாடுகளிலிருந்து இலங்கைக்கு அரிசி பெற்றுக்கொள்ளுதமகாகிய ஒழுங்குகளை அந்நாடுகளின் தலைநகரங்களில் ஆலோசித்துவிட்டு இந்நாடு திரும்பிய உணவுப் பொருள் அதிகாரி திரு. கோ. ஆழ்வாப்பிள்ளை அவர்கள் இவ்வருடமுடியும்வரையும் அரிசி தேவைக்குரியளவு இருக்கின்றதெனறும் அரிசியிலாது போகும் என்ற அச்சம எழவேண்டியதில்லை என்றும் அபிப்பிராயப்படுகின்றார் எனத் தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொன்மைக்குந் தொன்மையாகும் நன்மொழி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யார்கள் இன்னிசையால் தமிழ் பரப்ப ஆரம்பித்தனர். கி.பி. 615ம் ஆண்டிலே நாவக்கரசர் 'கூற்றாயின வாறுவிலக்ககலீர்' என்ற பாடல் தொடங்கித் தேவாரப் பாடலால் தமிழ் வளர்க்கும் தொண்டை ஆரம்பித்து வைத்தார். கி.பி. 642-ல் ஞானசம்பந்தரும், கி.பி 822-ல் சுந்தரரும், அதன் பின்னுல் மாணிக்கவாசகரும் அப் பணியிலுழைத்தனர். இயற்கையைப் பாடிய சங்கப் பாடலுடன் விளங்கிய தமிழ் மொழி இறைவனைப் பாடும் தேவாரப் பாடலுடன் விளங்கிய காலமே மீண்டும் தமிழ்வளர்ந்த காலமாகும் சமயகுரவர் நால்வருமே கடவுளைப் பாடித் தமிழை வளர்த்தனர்.

## வரலாறு நூல் வளம்

கி. பி. 890-ம் ஆண்டு ஆதித்திய சோழனுல் நடாத்தப்பட்ட திருப்புறம்பயம் போரின் பின்பே பல்லவராட்சி வீழ்ச்சியுற்றது. அதன் பின்புதான் தமிழரிஞட்சி தலையெடுத்தது. 12-ம் நூற்ருண்டிலே சேக்கிழார் தமிழடியார் வரலாற்று நூலையாக்கித் தமிழனுக்கு வரலாறு நூல்வளத்தை யளித்துப் போந்தார். இதன் பின்பு பல தல புராணங்களுமாக்கப்பட்டன. 18ம நூற்ருண்டிலே ஆங்கிலர் இந்தியாவுட் புகுந்தனர். தமது சமயத்தையும் மொழியையும் வளர்க்கும் முயற்சியிலீடுபட்டனர். ஆனுலும் பழந்தமிழ் நாகரீகத்திலூறிய தமிழனிடம் தமது சீர்கெட்ட நாகரிகத்தை மாத்திரம் பரப்பமுடியாது விட்டனர். தமிழ்ப் பெரியார்களும் தம்மொழியை வளர்க்க முன்வந்தனர். அவ்வித முனைப்பினுல தூண்டப்பட்ட பாண்டித்துரைத் தேவரவர்கள் சங்கமிருந்து தமிழாராண்ட மதுரையிலே 1901-ம் ஆண்டு தமிழ்ச் சங்கத்தை நிறுவினுர். அச் சங்கமே தமிழ் வளர்ச்சிக்காகப் பெரிதுமுழைத்து வந்தது. இன்றும் உழைத்து வருகின்றது. அதன் பின்புதான சென்னைப் பல்கலைக்கழகத்தினர் மதுரைச் சங்கத்தார் தனி இலக்கிய இலக்கணத் தேர்வையே நடாத்தி வருவதைக்கண்டு வரலாறு, தமிழிலக்கிய இலக்கண ஆராய்ச்சி, கல வெட்டு ஆகிய பாடங்களையும் சேர்த்துத் தமிழ் வித்துவான் வகுப்புத் தேர்வினை நடாத்த ஆரம்பித்தனர். அதனைத் தொடர்ந்து அண்ணுமலையாசர் அண்ணுமலைப் பல்கலைக்கழகத்தைத் தமிழ் வளர்ச்சிக்கெனவே ஆக்கினுர். அத்தொண்டு 1928ம் ஆண்டு நிறைவேறியது. அன்று தொடங்கி இன்றுவரை ஆங்கில வகுப்பிற்குப்போன்று தமிழ்ப் புலவர் வகுப்புக்கும் தருக்கம், சரித்திரம் தமிழிலக்கிய இலக்கண ஆராய்ச்சி ஆகிய பாடங்களுடன் தமிழிலக்கியம், இலக்கணம், கல் வெட்டு ஆகிய பாடங்களையும் வைத்து ஆங்கில வகுப்புக்கள் போன்றே இரண்டாண்டுகளில் ஒரு தேர்வு நடத்துவர். அதில் தேர்ச்சிபெற்ற பின்பே அடுத்த அடுத்த இரண்டாண்டுகளில் முடிவுத் தேர்வு நடத்துவர். அதற்கேற்றபடியே ஆங்கில பட்டதாரிகளுக்களிக்கும் சம்பளமே தமிழ்ப் பட்டதாரிகளுக்கும் வழங்கப்படுகிறது. இந்தியப் பல்கலைக் கழகங்களிலே தலைமைத் தமிழ் விரிவுரையாளர்களாக இருப்பவர்களெல்லாம் தமிழ்ப்புலவர்களேயாவர் இன்றர். பி. ஏ. வகுப்புக்களுக்கும் தமிழ் கற்பிப்பவர்கள் தமிழ்ப் புலவர்களே என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இதற்கிடையில் வித்துவான் என்ற சொல் வடமொழியாயிருப்பதால் தமிழறிஞர்க்கு அன்னிய மொழியில் பட்டம் வழங்கல் தகாதென எண்ணியே 1945-ம் ஆண்டு தொடக்கம் அண்ணுமலைப் பல்கலைக்கழகத்தினர் புலவர் எனப் பெயரை மாற்றியமைத்தனர். என்பதையும் அறிந்துகொள்ளல் நன்று. சென்னைப் பல்கலைக்கழகத்தார் இன்றும் வித்துவான் என்னும் பெயரையே வைத்துள்ளனர்.

இன்று அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப்பகுதித் துணைத் தலைவராக இருப்பவர் பண்டித வித்துவானே யாவர். அதற்கடுத்த படியுள்ள பல தமிழ் விரிவுரையாளர்களும் தமிழ் வித்துவான்களே யாவர் அவர்களின் கீழ் எம். ஏ. எல். ரி. பி. ஏ ஆனர்சு பட்டதாரிகள் சிலரும் தமிழ் விரிவுரையாளர்களாகக் கடமை யாற்றுகின்றன ரென்பதையும், தமிழாராய்ச்சித் துறையில் விரிவுரையாளராகவமர்ந்துள்ள பலரும் தமிழ்ப்புலவர்களே யென்பதையும் நம் தமிழர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் மாத்திரமல்ல பீ. ஏ வகுப்பு நடத்தும் கல்லூரிகளிலெல்லாம் தமிழ்த்துறையில கடமையாற்றுவோர் தமிழ்ப் புலவர்களே என்பதையும் அறிதல் வேண்டும். அடுத்தபடியாகப் புலவர்கள் இந்நாட்டில் கல்லூரியெனச் சொல்லப்படும் உயர்நிலைப் பள்ளிகளிலே தலைமைத் தமிழாசிரியராகக் கடமையாற்றுகின்றனர். அங்கு பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் கீழ வகுப்புகளில் கல்வி பயிற்றுத் தகுதியே பெறுவதுடன் புலவர்கள் பெறுஞ் சம்பளத்தை விடக் குறைந்த சம்பளமே (உயர் நிலைப் பள்ளியில் புலவன் 60 ரூபா பெறுகையில் பயிற்றப்பட்டோர் 38ரூபாவே பெறுவர், பீ.ஏ. பட்டதாரியின் சம்பளமும் 60 ரூபாவேயாகும்) பெறுகின்றனர்.

> பண்டித புலவர்
> ந. வடிவேலு அவர்கள்

### தனித்தமிழ்க்கென நடைபெறும் நான்காண்டு வகுப்பு:—

ஒருவன் பண்டிதப் பட்டம் பெற்றிருப்பினும் புகுமுகத்தேர்வில் வேண்டிய தொகையினருள ஒருவனுகத் தேர்ச்சிபெற்ருல்தான் புலவா வகுப்பில் சேர்ந்து படிக்க முடியும். பின்பு ஒவ்வோராண்டுத் தேர்விலும் தேர்ச்சி பெறுதல் வேண்டும். இரண்டாவதாண்டுத் தேர்வில தேறியோரே இறுதித் தேர்விற்குரிய வகுப்பில் சேர்ந்து

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

---

சமயப் பிரசாரம்;

## பட்டினத்தடிகள் குருபூசை

நாள்: நந்தன ஆடி மீ உரு ௨ (9-8-52) சனிக்கிழமை

காலம்: இரவு $6\frac{1}{2}$ — $8\frac{1}{2}$.

இடம்: சபை நாவலர் மண்டபம்.

நிகழ்ச்சிகள்:

பூசையும் கடவுளாராதனையும்.

பட்டினத்தடிகள் பாடற் பாராயணம்.

இணுவில் சைவப்பெரியார் ஸ்ரீமத் கா. சேதுலிங்கம்

'பட்டினத்தடிகள'

பண்டிதர் திரு.ம.வே திருஞானசம்பந்தபிள்ளை

சைவாபிமானிகள் சமுகமளிப்பார்களாக.

மு. மயில்வாகனம்,
சமயப்பிரசார அமைச்சர்
சைவபரிபாலன சபை

யாழ்ப்பாணம்
2-8-52.

M. 93 4—8—52.

---

## மதுபானத்துக்கு எதிர்ப்பு

### தென்கிழக்கு ஐரோப்பாவில்

தென் கிழக்கு ஐரோப்பாவிலுள்ள யூகோஸிலாவியா என்ற நாட்டிலே குடிவெறி மிகுதியினுல் உண்டாகும் கெடுதல்கள் வரவரக் கூடியிருக்கின்றன வென்றும் இந் நிலைமை, அரசாங்கத்தாருக்கும் கவலையைக் கொடுக்கின்றதென்றும், அந் நாட்டில் அகில இடங்களிலும் மதுபான எதிர்ப்புப் பிரசாரம் தீவிரமாக நடை பெறுகின்றதென்றும் புதினங்கள் கூறுகின்றன.

அடுத்த மாதத்திலே பெல்கிறேட் தலைநகரத்தில் மதுவருந்தாதோர் மகாநாடு நிகழவிருக்கின்றது.

---

## புதிய பாடத்திட்டக் கணிதங்கள்

திரு. வே. சிவக்கொழுந்து அவர்களால் இயற்றப்பெற்ற ஷை கணித நூல்கள் 2ம் வகுப்பு முதல் 7-ம் வகுப்பு ஈருக உள்ளவையும் உயர் வகுப்புகட்குரிய பாடிகணிதமும் வித்தியா பிரசுர சபையாரால் அங்கிகரிக்கப் பெற்றுள்ளன. பிரபல புஸ்தக சாலைகளில் பார்வையிடலாகும். தேவைகட்கெழுதுக.

பிரசுரம்:

வடலங்கா புத்தகசாலை
பருத்தித்துறை :: POINT PEDRO

M. 89 5, 8—8—52.

---

## பிரியாவிடைக் கூட்டம்

சாவகச்சேரித் தபாற் கந்தோர் அதிபர் திரு பே. செல்லையா அவர்கள் பண்டாரவளைக்கு மாறிப்போதல் காரணமாகச் சாவகச்சேரி மக்கள் டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு ஓர் பிரியாவிடைக் கொண்டாட்டம் நடத்தினர்.

திரு. க. அருணுசலம் B. A. அவர்கள் தலைமை வகிக்க, திரு. K. S. சரவணமுத்து தலைமைஆசிரியர் பிரியாவிடைப் பத்திரத்தை வாசித்தார். திரு. இ. ஐயம்பிள்ளை ஆசிரியர் பிரியாவிடைப்பாக்கள் பாடினுர். திருவாளர்கள் V. S. சோத்தி தேசு, V. விநாயகமூர்த்தி, S. K. திரவியநாயகம், போதகர் A. C தம்பிராசா முதலியோர் திரு. செல்லையா அவர்களுடைய கடமைத் திறன், நற்குண நற்செய்கைகள் முதலியவற்றைப் பற்றிப் புகழ்ந்து பேசினர். சிற்றுண்டியும் மேளவாத்தியமும் உறுப்புக்களாயமைந்தன.

ஈற்றில், திரு. செல்லையா அவர்களும் பாரியாரும் அன்பர்கள்சூழ மேளவாத்தியத்துடன் தபாற்கந்தோருக்கு அழைத்துச் செல்லப்பெற்றனர்.

## சமயக் கல்விக்கொரு வித்தியாதிகாரி

பாடசாலைகளிற் சமயக்கல்வி இடம்பெறுகின்றமையால் அக் கல்விமுறைபற்றிய சகல காரியங்களையும் மேற் பார்வை செய்ய ஒரு பிரத்தியேக உதவி வித்தியாதிகாரி தேவை எனக் கல்விப் பகுதி மத்திய ஆலோசனைச் சபை பரிசிலனை செய்துவருகின்றதாகவும் கல்வி அதிகாரி திரு. M. D. பண்டா இதை ஆதரிக்கின்றார் என்றும் தெரியவருகிறது.

---

## ஏல விற்பனை சாக்குகள்.

1952ம் ஆண்டு ஆவணி மாதம் 16-ந் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்ப்பாணத்திலிருக்கும் உணவுக் கட்டுப்பாட்டு விநியோக பண்டகசாலையில் கீழ் குறிப்பிடப்பெற்ற சாக்குகள் பிரசித்த ஏலத்தில் விற்பனை செய்யப்பெறும்.

2. சித்திபெறுங் கேள்விக்காரர் கேள்வியின்படி செலுத்தவேண்டிய தொகையில் நாலில் ஒருபங்கை உடனேயே விற்பனை நடாத்தும் உத்தியோகஸ்தரிடம் செலுத்தி தற்காலிக பற்றுச்சீட்டுப் பெறவேண்டும். கேள்வியின்படி செலுத்தவேண்டிய தொகை முழுவதையும் செலுத்த விரும்புவோர் பணத்தைச் செலுத்திப் பற்றுச்சீட்டுப் பெற வேண்டும். பின், பிரதி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி அக்கேள்வியோ கேள்விகளோ தமது அங்கீகாரம் பெற்றுவிட்டனவென்று அறிவித்தல் செய்த மூன்று நாட்களுள் சாக்குகள் பண்டகசாலையிலிருந்து எடுக்கப்பெறவேண்டும்.

3. சித்தியெய்துங் கேள்விக்காரர் மேலே காட்டியபடி முழுத் தொகையையுஞ் செலுத்தி சாக்குகளையும் பண்டகசாலையிலிருந்து எடுக்கத் தவறுவரேல் அவ்வக் கேள்விக்காரர்கட்கு நஷ்டமாகும் வகையில் குறித்த சாக்குகள் அகற்றப்பெறும்.

(சி) இனச் சாக்குகள்.

| விநியோக பண்டகசாலை | அளவு | இனம் | தொகை |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 112 | "சி" | 917 |
| ,, | 80 | "சி" | 1066 |

ஒப்பம்: செ. நிற்குணனந்தன்.
பிரதி உணவுக் கட்டுப்பாட்டதிகாரிக்காக.

கச்சேரி, யாழ்ப்பாணம். 28—7—1952 M. 88. 5-8.

---

## அடைவு நகை விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் வண்ணர்பண்ணை கிழக்கு, பொ. கா தாமோதரம்பிள்ளை கடையில் அடைவு வைக்கப்பட்டு இப்போ தவணை தப்பி எடுபடாமல் இருக்கும் கீழ் விபரிக்கப்படும் நகைகள் 27—8—52 புதன்கிழமை காலை 10 மணி தொடக்கம் என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

| நம்பர் | உ. மீ ஞ | கொடுத்த ரூபாய் | ஊர் பெயர் | நகை விபரம் |
|---|---|---|---|---|
| 4714 | 2—7—51 | 100 | சாவகச்சேரி தம்பு இராசையா | இமி கல் புரூச் 1 |
| 4717 | 3—7—51 | 37 | பண்டியதாழ்வு அருணுசலம் சோமசுந்தரம் | முறுக்குக் காப்பு சோடி 1 |
| 4727 | 6—7—51 | 40 | சாவகச்சேரி தம்பு இராசையா | தாலி 1ம் குண்டு 2 |
| 4785 | 17—7—51 | 35 | பிரப்பங்குளம் றோடு 56 நிர். M. M. மூசையதீன் | இமி வெ கல்தூக்கணம்சோடி 1 |
| 4787 | 19—7—51 | 20 | பெருமாள் கோவிலடி லெக்ஷ்மணன் செட்டி ராதாகிருஷ்ணன் | இமி வெ கதோடு சோடி 1 |
| 4789 | 19—7—51 | 40 | சோனகதெரு கொல்லேன் மீ. மு. உசன் தம்பி | இமி கல் மோதிரம். 1 |

வண்ணர்பண்ணை
4—8—52.

சி பசுபதிச்செட்டியார்
வெந்திஸமேஸதர்.

M. 92 5, 8—8—52.

---

# திருக்குறள்

இச்சிறந்த நூல் பதவுரை, கருத்துரை, விசேடவுரை, நூலாசிரியர் வரலாறு என்பனவற்றேடு ஆங்கில மொழிபெயர்ப்புஞ் சேர்த்து, பாகம் பாகமாக இப்பொழுது வெளிவந்துள்ளது.

1. முதற் பத்ததிகாரம் (1—10) 75 சதம்.
2. முதல் இருபத்திகாரம 1—20) ரூபா. 1-25 ,,
3. 25-ம் அதிகாரம் தொடக்கம் 34 முடிய S. S. C. பரீட்சைக்குச் சமய பாடம் ... .... 75 ,,
4. அறத்துப்பால் முழுவதும் (1—38) ... 1 50 ,,

மனேஜர்
சைவப்பிரகாச யந்திரசாலை,

யாழ்ப்பாணம், 5-8-52
M. 91. 5-8 15-8

---

## சத்திர வைத்தியம் விளைக்குஞ் சஞ்சலம்

கொழும்பு அரசாங்க பிரதம வைத்தியசாலையிலே காவிப் பகுதியிலுள்ள பிறேமாவதி யென்னும் பத்து வயசுப் பெண் பிள்ளையொன்று, தொண்டைத் தசை மூக்குத் தசை வளர்ச்சி நீக்கச் சத்திர வைத்தியம் செய்தபொழுது, உயிர் நீத்தார்.

இதற்குக் காரணம் பிழையான சத்திர வைத்தியத் தணிவெனக் கொண்டு இதைப்பற்றி விசாரணை செய்யும்படி நகர சடிதிமரண விசாரணைக்காரர் திரு. J. N. C. திருச்செல்வம் தெரிவித்திருக்கிறர்.

## ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவசுப்பிரமணியசுவாமி கோவில்

மேற்படி கோயிலில் நிகழும் ஆடிமீ 21-ந் திகதி (5-8-52) அபிடேக அலங்கார தீப ஆராதனையும், அதன் மேல் சுவாமி இரதத்திலெழுந்தருளி ஊர்வலம் வருதலும் நிகழுமென அறியவருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொன்மைக்குந் தொன்மையாகும் நன்மொழி

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

படிக்கும் இடத்தைப் பெறுவர். இறுதிவகுப்பில் 40 வீத மதிப்பெண் பெற்றோரே 3வது வகுப்பில் தேர்ச்சிபெற்றோராவர். உயர்ந்த மதிப்பெண் பெறுவோர் 2வது 1வது வகுப்பு பெறுதலுமுண்டு.

நான்காண்டுகள் தனித்தமிழிலே பயிற்சி பெறுவதாலுன் தமிழ்ப் பட்டதாரிகள் உயர்தர வகுப்புக்களில் தமிழ்போதிக்கும் தகுதியுடையவராக மதிக்கப்படுவாராயினர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலே நான்காண்டுகள் நாளொன்றுக்கு 5 மணி வீதம் கற்றுத் தேறியோரே புலவர்கள் இலங்கைப் பல்கலைக் கழகத்திலே மூன்றாண்டுகளில் ஓய்வு நேரங்களிலே—மாலையில் பொழுதுபோக்காக இரண்டு மணி நேரம் நாக்கு மொழிகளில் பயிற்சியளித்து, தமிழ் வரலாற்றினை ஆங்கிலத்தில் கற்பித்துத் தமிழ் டிப்புளோமாக்களை ஏற்படுத்தும் முயற்சியிலீடுபட்ட தமிழ்ப் பகுதியினர் அதில் தகுந்த பேறு காணுமையால் வகுப்புத் தொடங்கிய நான்காண்டுகளில் அவ்வகுப்பினை நிறுத்திவிட்டு தமிழில் அல்லது ஆங்கிலத்தில் ஒன்பதாம்வகுப்பில் தேர்ச்சிபெற்றோரை ஓராண்டில் பண்டிதராக்கும் முயற்சியை 1951ம் ஆண்டில் ஆரம்பித்தனர். தமிழ் அறியும் ஆவலின்றி ஒன்பதாம் வகுப்புத் தேறியதும் பல்கலைக் கழகத்தில் ஓராண்டுப் பண்டிதராகி உயர்ந்த சம்பளம் பெறலாம் என்ற பேராசையால், பணமொன்றையேநோக்கிச்சென்ற மாணவர்கள் இவ்வாண்டு பல்கலைக் கழகத்தை நாடியும் பயன்பெறும் வாய்ப்பிழந்து திரும்பவேண்டியதாயிற்று. ஓராண்டுப் பண்டித வகுப்பும் ஆரம்பித்த ஓராண்டிலேயேஒழிவதாயிற்று. 'வளி', 'வழி' போன்ற சொற்களையே பேதமறிந்து பயன்படுத்தத் தெரியாத ஒன்பதாம் வகுப்பில் தேர்ச்சி பெறும் மாணவர்கள் ஓராண்டில் தமிழ்ப்பண்டிதராக முனைவதானுல் அம் முயற்சி கைகூடாமை விபரீதமாகாது! அவ்விதம் ஒரு வகுப்பினை நடத்தி ஓராண்டில் பண்டிதர்களை ஆக்கிவிடலாம் எனத் திட்டமிட்ட பல்கலைக் கழகத் தமிழ்ப் பகுதியினரெனக் கூறிக்கொள்ளும் தமிழறியாதோரின் அறிவின் நிலையைத்தான் இவ் விபரீத விளைவு எடுத்துக் காட்டுகின்றது. பல்கலைக் கழகத் தமிழ்ப் பகுதியினர் இனியாவது உண்மையை உணர்வார்களா?

### செய்ய வேண்டியதென்ன

இனித் தமிழ் நாட்டு வரலாற்றின் மூலம் நாமறிவன யாவை என ஆராய்வோம். முதலில் அரசியலாரின் உழைப்பின் மூலமே அந் நாட்டு மொழி வளர முடியுமென்பதனை அறிகின்றோம். தமிழிற்கெனவே பல ஆண்டுகளைச் செலவிடும் மாணவர்களே, தமிழறிந்தவர்களாக முடியுமென்பதனை அறிகின்றோம். வேற்று மொழியினுக்கமே தமிழ் வளர்ச்சியைத் தடை செய்கின்ற தென்பதையும் அறிகின்றோம். பண்பட்ட தமிழன் தன் மொழியையன்றி வேற்று மொழியைப் பாராட்ட முற்படான் என்பதையும் அறிகிறோம் தாய்மொழிமூலமே உண்மையறிவு பெற முடியுமென்பதையு மறிகிறோம். "இந்தி மொழியை யாம் அரசியல் மொழியாக ஏற்றுக் கொள்ளோம்" என்ற உறுதி பூண்டு பெற்ற வெற்றியே தமிழனின் மொழிப்பற்றையும் பண்பாட்டையும்காட்டி நிற்கின்றது. உறுதி பூண்ட ஒரு தமிழனே தமிழின் மதிப்பை விளக்கமுடியும் என்பதே நாவலர் வரலாறு காட்டும் உண்மை. பி. ஏ. தேர்வில் தேர்ச்சிபெற்ற ஒருவன் பல்கலைக் கழகத்திலும், கல்லூரிகளிலும் ஆசிரியராக முடியாமையையும், உயர்நிலைப்பள்ளியிற்றானும் திறமையுள்ளோரே ஆசிரியராக முடியுமென்பதையும், தமிழ்ப்பட்டதாரி "புலவன்" உயர்நிலைப்பள்ளி முதல் பல்கலைக்கழகம்வரை தகுதிக்கேற்ப ஆசிரியராக அமரமுடியுமென்பதையுமறிகிறோம்.

### அரசியல் வாதிகள் அவதானிப்பார்களா?

இலங்கையில் தமிழ்ப்பட்டதாரியின் நிலையென்ன ஆங்கில உயர்நிலைப்பள்ளிகளில் ஆங்கிலப் பட்டதாரிகள் போல மேல்வகுப்புகளில் கற்பிக்கும் பணியை மேற்கொண்டும் ஆங்கிலப்பட்டதாரிகள் ஆரம்பச் சம்பளம் 180 ரூபா பெறும் தகுதியுடைய ஆசிரியர்களாகத் தமிழ்ப்பட்டதாரி 48 ரூபா சம்பளம் பெறும் தகுதிபெறு ஆசிரியனாக மதிக்கப்படுகின்றான் தமிழர்களின் தலைவர்களெனப் பேசிக்கொள்ளும் பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் இதுவரையில் தமிழ்மொழி வளர்ச்சிக்காக உழைப்போமென்ற வாய் வேதாந்தத்துடன் நிற்பதன்றித் தமிழ் வளர்ச்சிக்காக வாழ்நாளில் நான்காண்டுகளைத் தனியாகச் செலவிட்ட தமிழ்ப்பட்டதாரிகளின் நிலைபற்றி எவரும் அக்கறைகொண்டு அரசாங்கத்துக்கு அவர்களின் தவறை எடுத்துக்காட்டிப் பல்கலைக்கழகத்தில் பட்டம்பெற்ற புலவர் வித்துவான்களின் சம்பள அளவை உயர்த்தி அவர்கள் வறுமையை நீக்க முற்பட்டதாகக் காணேம். இனிமேலாவது தமிழார்வம் மிக்க பாராளுமன்றத் தமிழுறுப்பினர்கள் தமிழ்ப் பட்டதாரிகள் சம்பளத்தை உயர்த்தப் பாடுபடுவார்களா? அன்றேல் தமிழ்வேண்டாம் ஆங்கிலங் கலந்தால் தான் தமிழ் சுவைப்படும் எனக் கூறிக்கொண்டு தமது சுயநலத்தை மாத்திரம் நிறைவேற்றிக்கொண்டு தூங்கிக்கிடப்பார்களா? இருந்து பார்ப்போம். தமிழன் கண்ட கனவுகளனைத்தும் நிறைவேறின. அவன் கனவு பகற்கனவாகவில்லை. இது வரலாற்றில கண்ட உண்மை. இன்னும் உண்மையில் தமிழாக்கங்கருதி உழைக்க முன்வருவோரின் கனவு [illegible] தடுத்து நிறுத்திவிட முடியாதென்பதை எவரும் உணரதலவேண்டும். வாழ்க தமிழ்மொழி.

## சுந்தரமூர்த்தி நாயனுர் குருபூசை

### மறவன்புலோவில்

நாயனுர் குருபூசை கி. மு சங்கம், பெ. ஆ. சங்கம், ச. ச. நிலையம் என்பவற்றின் ஆதரவில் 30-7-52 புதன் கிழமை குருபூசையும அருட்பாக்கள் ஓதுதலும் சிறப்பாக நடைபெற்றன. பின் திருவாளர் க. வேலுப்பிள்ளை அவர்கள் தலைமையிற் கூட்டம் ஆரம்பமாயது. திருவாளர்கள் ஆசிரியர் நா. காங்கேயர், வ. பொன்னையா என்பவர்களால் சுவாமிகளின் ஜீவிய சரிதம் பேசப்பட்டது. திரு. ப. மார்க்கண்டு 'மனது கடமைகள்' என்பது பற்றிப் பேசினுர். தலைமை ஆசிரியர் திரு. நா பொன்னம்பலம் 'பக்தி' என்பதுபற்றிச் சிறந்த சொற்பொழிவாற்றினுர்.

### சித்தங்கேணியில்

சுந்தரமூர்த்திநாயனுர் அவர்களின் குருபூசை சித்தங்கேணி கணேச வித்தியாசாலை மண்டபதில் (30-7-52)புதன்கிழமை காலை 10 மணியளவில் ஷை பாடசாலை கலாவிருத்திச் சங்க ஆதரவில் திரு. மா. கனகசபாபதி அவர்கள் தலைமையில் ஆரம்பமாயது. அத்தருணம் ஆசிரியர் திரு. செ. நாகலிங்கம் சுந்தரரின் சரிதையை எடுத்து விளக்கினுர். பின்பு திருவாளர்கள் வ. ஈஸ்வரபிள்ளை, சு. இரத்தினம் ஆசிரியர்கள் சுந்தரமூர்த்தி நாயனுர் செய்த அற்புதங்களைப் பற்றிப் பேசினுர்கள்.

### காரைநகரில்

கடந்த (30-7-52) புதன் கிழமை பி. ப. ஒரு மணியளவில் வியாவிற் சைவபரிபாலன வித்தியாலயத்தில் விசேட பூசை ஆராதனைகள் நடைபெற்றபின் வித்துவான் மு. சபாரத்தினம் அவர்கள் நாயனுரின் திவ்விய சரித்திரத்தை எடுத்துரைக்கும்போது அவர் செய்த அதியற்புதங்களையும் சிவபெருமானுடன எவ்விதம் அன்புகொண்டிருந்தாரென்பதையும் அவருடைய தேவாரங்களிலுள்ள தெய்வீகத் தன்மைகளையும், சிவபிரான் எவ்விதம் அடியார்க்கெளியனுக சுந்தரமூர்த்தியுடன் நடந்து கொண்டார் என்பதையும் விரித்துக் கூறினுர்.

### தெல்லிப்பழையில்

ஷை குருபூசை (30-7-52) புதன்கிழமை பிற்பகல், ஸ்ரீகாசி விநாயகர் ஆலய மண்டபத்தில் பாலர் ஞானேதய சபையாரால் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

பிற்பகல் மூன்றரை மணியளவில் விநாயகருக்கும் நாயனுர் திருவுருவப்படத்திற்கும் ஆராதனை நடைபெற்றதும கூட்டு வணக்கம் மாணவர்களாற் செய்யப்பெற்றது. தலைவர் நாயனுரின் மகிமைகளை விளக்கிப்பேசினுர்.

அதன்மேல் செல்வன் க. ஜெகதீஸ்வர ஐயர், செல்வன் கு. தர்மராசா ஆகியோரும், செல்விகள் கு. குணபூபதி, சி. திலகவதி. சி. சாரதாதேவி, சி. சின்னம்மா, சி. பாலசரஸ்வதி கு விஜயலட்சுமி, ச சரோஜினி ஆகிய மாணவிகளும் தேவாரம ஓதுதலிற் பங்குபற்றினர்.

செல்வி பொ. பொன்மணி "சுந்தரமூர்த்தி நாயனுர்" என்னும் விஷயம்பற்றிப் பேசினுர்.

பிற்பகல் 6 மணியளவில் தேவார பாராயணத்துடன் கூட்டம் இனிது நிறைவுற்றது.


L.K.S. LEBBAY BROS
GOLD HOUSE

நல்ல வாட்சிகள் கிடைக்குமிடம்
எல். கே. எஸ்.
லெப்பை பிரதஸ்
தங்கமாளிகை
கன்னுதிட்டி, யாழ்ப்பாணம்.

இலங்கையின்
மிகப்பெரிய
நகை
வியாபாரிகள்
=o=
தந்தி: "JEWELLERS"
போன்: 161.
ஸ்தானம்:
63, கன்னுதிட்டி
யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணம் ஐக்கியநாணயசங்கம் பந்தி
1918-ம் ஆண்டு ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர்மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
134,3670
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்று 1ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப்பற்றுவரவு.
எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானுல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.
க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.
இந்தியகோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.
நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும், வட்டி 12 விகிதம் அறவிடப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.
இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

Std. 14 20-11-46—20-11-49.
S. கனகசபை
சிறுப்பர்.

திறமான தேக்க மரங்கள் பல தினிசுகளிலும்
திறமான ஓடுகள் 13½, 14 இஞ்சிகளிலும்
வந்திருக்கின்றன
தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்
சேகரம் & சன்ஸ்
Std. 2
ஆஸ்பத்திரிரோட், யாழ்ப்பாணம்.

நீங்கள் இளமைப் பருவத்தையடைய
சி. எம். சாமி
தங்க பஸ்பம்
உபயோகியுங்கள்
தாதுபுஷ்டியைத் தருவதில் சிறந்தது.
இதற்கு நிகரானமருந்து வேறு ஒன்றுமில்லை.
அபார தாது புஷ்டியும், பலமும், பசியும், இரத்த விருத்தியும் உண்டாக்கும். இல்வாழ்க்கையில் அதிஅற்புதசுகந்தரும.
நீரழிவு பவுத்திரம, மூலம், குனமம, இடுப்புவலி, வாய்வு, வெள்ளை, வெட்டை, நீர்க்கடுப்பு முதலிய சகல வியாதிகளையும் நீக்கும,
24 நாள் பஸ்பம் அனுபானத்துடன் விலை ரூ 25—0—0
குரு பஸ்பம் (தொய்வுக்கு)
தொய்வு, இருமல், ஈளை, கபம், காசம், மார்துடிப்பு தொண்டைவலி, க்ஷயம முதலிய சகல வியாதிகளையும நீக்கும்.
அருமையானது.
24 நாள் புட்டி 1க்கு விலை ரூபா 20
மலையப்பசாமிவைத்தியசாலை பழனி S I
(கியாட்லாக் இனும்)
M. 16. 25-4-52—25-10-52.


கற்றோர்க்கழகு கசடற மொழிதல்

Printed and Puplished by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245; Navalar Road Jaffna. or and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponna, Jaffna on Tuesday. August 5, 1952.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org